**செய்தி வெளியீடு எண்.27/2017 நாள் 21.04.2017**

## புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் பெறுவதற்கு கட்டிடங்களில் கழிவுநீர் மறுசுழற்சி கட்டமைப்பு அவசியம் – சென்னைக் குடிநீர் வாரியம் அறிவிப்பு

-----

சென்னை மாநகரில் கட்டப்பட்டுள்ள **சிறப்பு மற்றும் அடுக்குமாடி** கட்டிடங்களுக்கு புதிய குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் உரிமையாளர்கள் அந்தக் கட்டிடங்களில் கழிவுநீர் மறுசுழற்சி முறை கட்டமைப்பினை கண்டிப்பாக அமைக்க வேண்டும் எனவும் அவ்வாறு அமைக்கப்படாத கட்டிடங்களுக்கு புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு வழங்கப்படமாட்டாது எனவும் சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு,வி.அருண் ராய், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்,

தற்போது கழிவறைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரும், குளியலறை, சமையலறை. துணி துவைத்தல் மற்றும் பாத்திரங்கள் கழுவுதல் போன்றவற்றால் வெளியேறும் கழிவுநீரும் ஒரே கழிவுநீர் கட்டமைப்பின் மூலம் வெளியேற்றப்படுகிறது.

தமிழ்நாடு அரசால் கடந்த 2002ல் அறிவிக்கப்பட்ட கட்டிட விதிமுறைஅரசு ஆணையின் படி வெளியேற்றப்படும் கழிவுநீர் அனைத்தையும் ஒரே கழிவுநீர் கட்டமைப்பில் வெளியேற்றாமல் கழிவறையிலிருந்து வெளியேறும் கழிவுநீரை தனியாகபிரித்து கழிவுநீர் கட்டமைப்புகளில் இணைத்தும் குளியலறை, சமையலறை, துணி துவைத்தல் மற்றும் பாத்திரங்கள் கழுவுதல் போன்றவற்றால் வெளியேறும் கழிவுநீரை தனியாக பிரித்து மறுசுழற்சி செய்து மீண்டும் அதனை பயன்படுத்திக் கொள்ளவும் ஆணை இடப்பட்டுள்ளது. ஆனால் இந்த விதிமுறைகளை ஒரு சில கட்டிடங்கள் மட்டுமே பயன்படுத்துகின்றன.

பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட குடிநீர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு கழிவுநீர் மறுசுழற்சி முறையை கட்டாயமாக நடைமுறைப்படுத்தினால் எதிர்வரும் காலங்களில்

சென்னை மாநகரின் குடிநீர் தேவையை 15% (விழுக்காடு) பூர்த்தி செய்ய இயலும் என சென்னைக் குடிநீர் வாரியம் கணக்கிட்டுள்ளது. இந்த இலக்கை படிப்படியாக எட்டுவதற்காக சென்னைக் குடிநீர் வாரியம் புதிய இணைப்பு பெறும் கட்டிடங்களுக்கு கழிவுநீர் மறுசுழற்சி முறையை கட்டாயமாக்க முடிவெடுத்துள்ளது.

இவ்வாறு கழிவுநீரை பிரித்து கையாளும் முறையால் கழிவறையில் பயன்படுத்தும் நீர் மட்டுமே கழிவுநீர் இணைப்புகளுக்கு சென்று சேரும். குளியலறை, சமையலறை, துணி துவைத்தல் மற்றும் பாத்திரங்கள் கழுவுதல் போன்றவற்றால் வெளியேறும் கழிவுநீர் மறுசுழற்சி செய்யப்பட்டு செடிகளுக்கு ஊற்றவும், வாகனங்கள் கழுவுவதற்கும், நிலத்தடி நீரை செரிவூட்டுவதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாமலிருக்க இந்த புதிய விதிமுறை சாதாரண கட்டிடங்களின் உரிமையாளர்களுக்கு கட்டாயமாக்கப்டாது எனவும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

2002ம் வருடத்திற்கு பிறகு சிறப்பு மற்றும் அடுக்குமாடி கட்டிடங்களுக்கு அனுமதி பெற்றவர்கள் தங்களுடைய கட்டிடங்களில் டிசம்பர் 2017 க்குள் கழிவுநீர் மறுசுழற்சி முறை கட்டமைபை உருவாக்கி கொள்ளவேண்டும் எனவும் சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு,வி.அருண் ராய், இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்